**புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வதிகின்ற இலங்கையர்களில் 150 உறுப்பினர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்குகாக ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு மங்கள சமரவீர அவர்களினால் ஆற்றப்பட்ட உரை**

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, 2015 யூன் 11 ஆந் திகதி**

பொது ஒழுங்கு மற்றும் கிறித்தவ மத அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு ஜோன் அமரதுங்க அவர்களே!

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராகிய திருமதி சித்திராங்கனி வாகீஸ்வரா அவர்களே!

பொது ஒழுங்கு மற்றும் கிறித்தவ மத அலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளராகிய திரு. டபிள்யூ.ஏ. சூளானந்த பெரேரா அவர்களே!

குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகமாகிய திரு. எம்.என். ரணசிங்க அவர்களே!

மேன்மைதங்கிய விருந்தினர்களே!

நண்பர்களே!

இந்த அமைச்சில் இந்த விசேட தினத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு இயலுமானதாகவிருக்கின்றமையையிட்டு நான் கௌரவிக்கப்பட்டுள்ளேன். இந்த வைபவத்திற்கு வரலாற்று ரீதியான குடியரசுக் கட்டடத்தை நிகழ்விடமாகத் தெரிவுசெய்தமைக்கு எனது அமைச்சரவைச் சகபாடியாகிய மாண்புமிகு ஜோன் அமரதுங்க அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கும் இச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்த விரும்புகின்றேன்.

இன்று நீங்கள் உங்களுடைய மூலநாடாகிய இலங்கையுடன் உங்களது தொடர்புகளை விதிமுறையாகப் புதுப்பித்து திரும்பவும் நீங்கள் உங்களுடைய புதிய இல்லங்களாகத் தெரிவு செய்துள்ள நாடுகளுக்கும் மேலதிகமாக இந்நாட்டின் பிரசைகளாகியுள்ளீர்கள்.

நீங்கள் திரும்பவும் உங்களுடைய சொந்தமாக அபிவிருத்தி, நல்லிணக்கம், சமாதானம், வளவாய்ப்பு ஆகியவற்றை நோக்கிய இலங்கைப் பிரயாணத்தைத் தெரிவு செய்துள்ளமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இது புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்துக் கொண்டிருக்கும் 15 இலட்சம் மக்களில் ஒருசில மக்களினால் மாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையாகும். உண்மையிலேயே இது 1987ஆம் ஆண்டிலிருந்து வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களில் 34,000 இலங்கையர்களினால் எடுக்கப்பட்டுள்ள திடமானவொரு பொறுப்பேற்பு நடவடிக்கையாகவுள்ளது.

உண்மையிலேயே உங்களில் சிலர் முன்னதாகவே பிரசாவுரிமையை விதிமுறையாக மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் விரும்பியிருந்தீர்கள் என்பது பற்றியும் எமக்குத் தெரியும். ஆனால் இந்நோக்கத்திற்கான வசதி கடந்த சில ஆண்டுகளில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த்து.

மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்ற சமூகத்தின் உண்மையான பெறுமதியை உணர்கின்றதுடன் உங்கள் அனைவரையும் எமது பிரசைகளாக நாம் வரவேற்கின்றோம். நீங்கள் அனைவரும் தற்போது வெளிநாடுகளில் இலங்கையின் கொடியைப் பிடித்துக் கொண்டிருக்கின்ற இந்நாட்டின் பிரசைகளாவீர்கள்.

இலங்கையர்களின் சிவில், பொருளாதார, கலாசார வாழ்க்கையின் சகல அமிசங்களிலும் உங்களுடைய பங்குபற்றுதலை நாம் வரவேற்கின்றோம்.

நீங்கள் பங்களிப்புச் செய்வதற்கான விடயங்கள் பெருமளவில் உள்ளன என்பதுடன் உங்களுடைய அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கும் நிறைய விடயங்கள் உள்ளன.

நீங்கள் அநேக வெவ்வேறு அரசியல், பொருளாதார, சமூக முறைமைகளிலும் விஞ்ஞானம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றில் அதிசிறந்த நடைமுறைகள் பற்றிய அறிவையும் கல்விசார் துறைகளிலும் கலாசாரத்திலும் நிலவுகின்ற ஆகப்பிந்திய கருத்துக்கள், அபிவிருத்திகள் மற்றும் போக்குகள் பற்றிய அனுபவங்களை உங்களுடன் வைத்திருக்கின்றீர்கள்.

முக்கியமாக மற்றவர்கள் விட்ட பிழைகளை நீங்கள் பார்க்கலாமென்பதுடன் நாங்கள் இலங்கையில் எமக்கு வழங்கப்பட்ட நிலைமையைப் பற்றி மதிப்பிடுவதற்கு நீங்கள் உதவி புரியலாம்.

உங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டாவது நாடுகளுடனும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுடனுமான தொடர்புகள் என்பது ஓர் பூச்சியத் தொகை விளையாட்டு அல்ல என்பதையும் நாம் அனைவரும் சமாதானத்தையும் வளவாய்ப்பையும் வேண்டுகின்றோமென்பதையும், நாம் அனைவரும் சம நிலையிலுள்ளதும் நியாயமானதுமான சமூகத்தையும் உலகத்தையும் வேண்டுகின்றோமென்பதையும் கவனத்தில் கொள்ளுவது முக்கியமானதாகும்.

இலங்கை எமது தாய் நாடாகும். சுதந்திரம் கிடைத்ததிலிருந்து பல ஆண்டுகளாக நாம் எம்மை வெவ்வேறு வழிமுறைகளில் அதாவது இன, மத, மொழியியல் ரீதியாகப் பிரிக்கப்படுவதற்கு இடமளித்துள்ளோம். இவை எப்படியானவைகளாக-விருந்தபோதிலும் நாம் துயரத்தை அனுபவித்துள்ளோம். நாம் எமது நாட்டின் சகல பாகங்களிலும் வன்செயல் காரணமாக எமது சிறந்த வாழ்க்கை முன்னேற்றங்களை இழந்துள்ளோம். நாம் பெருமளவில் வன்செயல்களைக் கண்டுள்ளோம். இது மனரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் ஐக்கியப்படுவதற்கான காலமாகும். இந்நாடு எம்மை இணைக்கவேண்டியுள்ள பொதுவெளியாகியுள்ளது. அதாவது இந்நாடானது இந்நாட்டில் வதிகின்ற எம்மையும் எமது நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வதிகின்ற உங்களையும் இணைக்கும் பொது வெளியாகியுள்ளது.

கடந்த காலத்தில் விடப்பட்ட பிழைகள் திரும்பவும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படாமல் இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இந்நாட்டு மக்கள் வன்செயலுக்குத் தங்களுடைய புத்திரர்களையும், புத்திரிகளையும் மேலும் இழப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாது.

நாம் நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் கொண்டவொரு நாட்டினமாக ஒன்று சேர்ந்து இந்நாட்டிலுள்ள தற்போதைய மற்றும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கு நலனை ஏற்படுத்தும் பொது இலக்குகளை எய்துவதற்கு முயற்சி செய்து இலங்கை சகல துறைகளிலும் தனது முழுமையான திறனை எய்துவதை இயலச் செய்தல் வேண்டும்.

உங்களுடைய உதவியுடனும், பங்குபற்றுதலுடனும் இக்குறிக்கோள்களை நாம் தனித்தனியாகச் செயற்படுவதனால் அடைவதைவிட வேகமாகவும் சுலபமாகவும் அடைய முடியும்.

இப்பிரயாணத்தில் நீங்கள் முக்கியமான வகிபாகமொன்றை வகிக்க முடியும். நீங்கள் இலங்கைக்கும் உங்களுடைய விருந்தோம்பல் நாடுகளுக்குமிடையே ஓர் பாலமாக உள்ளீர்கள். உங்களில் ஒவ்வொருவரும் உங்களுடைய விருந்தோம்பல் நாடுகளின் தூதுவரொருவராகவுள்ளீர்கள். உங்களில் ஒவ்வொருவரும் வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையைத் தாய் நாடாகக் கொண்ட பதினைந்து இலட்சம் (1 ½கோடி) மக்களுக்கும் தூதுவர்களாகவுள்ளீர்கள்.

இலங்கையின் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளவர்களின் தலைக்குரிய வருமானம் உலகத்தின் ஆகப்பெரிய தலைக்குரிய வருமானங்களில் ஒன்றாகவிருப்பதுடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தொகுதிகளில் இது மிகவும் சிறப்பு மிக்க ஒன்றாகவுள்ளது.

உண்மையிலேயே பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பின் கூற்றின்படி 2006ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பில் வதிகின்ற மூன்று உறுப்பினர்களில் ஒருவர் கல்வி கற்ற உயர் தொழில் புரிபவராவர்.

இந்த அமைப்பு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு இலங்கையை தாய் நாடாகக் கொண்ட 8000 ற்கும் மேற்பட்ட சட்டம் இயற்றுபவர்களையும் சிரேட்ட உத்தியாகத்தர்களையும் முகாமையாளர்களையும் கொண்டுள்ளதாக மதிப்பிடுகின்றது.

சுருக்கமாகக் கூறுமிடத்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு வதியும் இலங்கையர்கள் கடின உழைப்பையும், திறமையையும் பொறுப்பு-ணர்வையும் கொண்ட இலங்கையின் புலம்பெயர்ந்தவர்ளாகவுள்ளனர். அவர்கள் தங்களுடைய இல்லங்களாக்கியுள்ள நாடுகளுக்கு கடினமான உழைப்பு மூலம் சாதகமான ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்துள்ளதுடன் அவர்கள் அந்நாடுகளில் செல்வாக்குடையவர்களாகவும் திகழ்கின்றனர்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்றவர்கள் வெளிநாடுகளிலுள்ள அநேக நாட்டினங்களின் விஞ்ஞானத்தினதும், தொழினுட்பத்தினதும் முன்னேற்றத்திற்கும் நிதியைத் தேடிப் பின்தொடர்தல் மற்றும் செல்வத்தை ஈட்டுதல் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான தங்களுடைய பங்களிப்பைச் செய்முறையில் காண்பித்துள்ளனர்.

தற்போது இவர்களை வரவேற்பதற்கு இலங்கை தனது கதவுகளைத் திறந்து வைத்திருப்பதனால் இவர்கள் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் அபிவிருத்தி நோக்கி இலங்கை மேற்கொண்டுள்ள பதிய பிரயாணத்தில் பங்காளிகளாகவிருப்பதன் பொருட்டு இந்த வரவேற்பை ஏற்று அதற்கு அனுசரணை வழங்குவதன் பொருட்டு இலங்கைக்குத் திரும்பிவருவார்களென நாம் நம்புகின்றோம்.

இவர்கள் எமது அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும் எமது சிந்தனையை மேம்படுத்துவதற்கும் எமக்கு உதவுவதன் பொருட்டு ஆண்டுகளின் போக்கில் தாங்கள் பெற்ற திறனையும் தேர்ச்சியையும் பயன்படுத்துவார்கள் என நாம் நம்புகின்றோம்.

மோதலின் நீண்ட ஆண்டுக்காலப் பகுதியில் ஏற்பட்ட மூளைசாலிகளின் வெளியேற்றம் காரணமாக எற்பட்ட பின்னடைவை மாற்றியமைப்பதற்கு நாம் கடினமாக உழைத்து தற்போது இலங்கை அதன் வரலாற்றிலான இந்த நெருக்கடியான கால கட்டத்தில் மூளைசாலிகளின் வருகையின் நிமித்தம் சகல நலன்களையும் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இரட்டைக் குடியுரிமை பெற்ற பிரசைகள் எம்மை நெருக்கமாக ஒன்றாகக் கொண்டு வருவதற்கும் திரும்பவும் நாம் ஒன்றாகப் பிரயாணம் மேற்கொள்வதை இயலச் செய்வதற்குமான ஓர் பாலமாகத் திகழக்கூடிய ஓர் சிறப்புரிமை நிலையிலுள்ளனர்.

நீங்கள்தான் இரண்டு உலகங்களினதும் அதிசிறந்த விடயங்களை வைத்திருக்கின்றீர்கள் என்று கூறுகின்றனர். ஆனால், ஓர் நாடாக உங்களில் நாம் இரண்டு உலகங்களினதும் அதிசிறந்த விடயங்களை வைத்திருக்கின்றோம்.

நீங்கள் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் உலகிலுள்ள சில மிகவும் அபிவிருத்தியடைந்தவைகளும் மிகவும் முன்னேற்றமடைந்தவைகளுமான நாடுகளின் தலைவர்கள், பிரசைகளுக்கிடையே வசித்துக் கொண்டும் வேலை புரிந்துகொண்டும் இருக்கின்றீர்கள். அப்படியிருந்த போதிலும் நீங்கள் எமது தீவுடன் மிகவும்நெருக்கமான தொடர்புகளையும் பேணிவைத்துக் கொண்இருக்கின்றீர்கள்.

உங்களுடைய இனக்கலப்பு ஆள் அடையாளம் சுற்றுலா, வியாபாரம் மற்றும் முதலீடுகளுக்கு வசதியளிக்கின்றதுடன் இலங்கைக்கானவொரு நுழை வாயிலாகவும் திகழ்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கைக்கு உங்களுடைய பேரார்வமே தேவைப்படுகின்றது. அதாவது புதிய இலங்கையொன்றை உருவாக்குவதற்கான எமது பிரயாணத்தில் சேர்ந்துகொள்ளுமாறு புலம்பெயர்ந்தவர்களையும் உலகத்தையும் ஊக்குவிப்பதற்கு உங்களுடைய பேரார்வம் தேவைப்படுகின்றது.

எனது முன்னைய உரைகளில் ஒன்றில் இலங்கையின் நவீன இராசதந்திரியொருவருக்கு இராச தந்திர நிலையின் அதே அளவிற்கு விற்பனைத் திறனும் முக்கியமானது என விவாதித்திருந்தேன். இது இலங்கையின் பிரசைகளாக வெளிநாடுகளிலும் பிற இடங்களிலும் இந்நாட்டு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்களைப் போன்ற பிரசை தூதுவர்களுக்கும் ஏற்புடைத்தானதாகும்.

இலங்கை உல்லாசப் பிரயாணிகளுக்கு மட்டுமே ஓர் சொர்க்கமாகவிருப்பது மாத்திரமின்றி முதலீட்டாளர்களுக்கும் கூட ஓர் சொர்க்கமாகிக் கொண்டிருக்கின்றது என்பதைப் பற்றி உலகத்திற்கு தூண்டுதல் வழங்கி வற்புறுத்திக் கூறும் சிறப்புப் பணியை நீங்கள் மேற்கொள்ளுவீர்களென நாம் நம்புகின்றோம்.

எமது கதையை அதாவது எமது நாட்டின் கதையை வெளியேயுள்ள உலகத்திற்கு நீங்கள் எடுத்துச் செல்வீர்கள் என நாம் நம்புகின்றோம். உலகத்திற்கு நாம் அனுபவித்த மோதலின் வேதனையைப் பற்றியும் முன்னேறிச் செல்வதற்கு இது மட்டுமே அர்த்தமுள்ள வழிமுறையாக இருக்கின்றமையை உணர்ந்துகொண்டு இப் புதியதும் நம்பிக்கையூட்டுகின்றதுமாகவுள்ள பிரயாணத்தைத் தொடங்குவதற்காக எமது சனநாயகம் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டமையைப் பற்றி நீங்கள் எடுத்துக் கூறவேண்டும்.

உலகத்திற்கு இத்தீவின் அழகைப்பற்றியும், அதன் பண்டைய வரலாற்றைப் பற்றியும், முதலீட்டாளர்களுக்கான மூலவளவாய்ப்புப்பற்றியும், இத்தீவின் உயர்தர மனிதவளங்கள் பற்றியும் அதன் அமைவிடத்தின் அனுகூலம் பற்றியும் எடுத்துக் கூறுங்கள். இன்று அத்தினத்தில் தனிப்பட்டவொரு நடைமுறை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு உங்களுக்கு இன்று நான் அழைப்பு விடுக்கின்றேன்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ளவர்கள் ஈடுபடுவதையும் பங்களிப்புச் செய்வதையும் ஊக்குவிப்பதன் பொருட்டு இந்த அமைச்சு இவ்வாண்டில் பின்னர் ஓர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ளவர்கள் வைபவமொன்றை ஒழுங்கு படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளது.

கிரமமான ஓர் வருடாந்த நிகழ்வு என்ற உருவத்தையும் கூட எடுக்கக்கூடிய புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வதிகின்றவர்களை இலங்கையுடன் இணைப்பதற்கான அத்தகையவொரு நிகழ்ச்சியானது இந்நாட்டிலுள்ள சமூகங்கள் புலம்பெயர்ந்தவர்களின் அறிவு, திறன், நிபுணத்துவம் மற்றும் தேர்ச்சி ஆகியவற்றிலிருந்து நலன் பெறுதை இயலச்செய்யுமென நாம் நம்புகின்றோம்.

இத்தகைய ஒழுங்குபடுத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளினால் ஒரு சில நாடுகள் அதாவது பெயரிட்டு குறிப்பிடுமிடத்து இந்தியாவும் அயர்லாந்தும் நன்மைடைந்துள்ளமையைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.

உங்களை அனணத்துத் தழுவுவதற்கும், தங்களுடன் ஈடுபாட்டை வைத்திருப்பதற்கும் புதிய வழிவகைகளைப் பற்றி நாம் சிந்திப்பதற்கு முயற்சி செய்கின்ற வேளையில் நான் இப்பிரயாணத்தில் சேர்ந்து கொள்வதில் நீங்கள்

புதுமை புகுத்துபவர்களாகவும் உருவாக்கம் செய்பவர்களாகவும் இருக்குமாறு வற்புறுத்திக் கூறுகின்றேன்.

ஒரு வேளை உங்களுடைய விருந்தோம்பல் நாடுகளிலுள்ள எமது தூதரகங்களின் உதவியுடன் இலங்கையர்களாகிய நீங்கள் வெளிநாடுகளிலுள்ள இரட்டைப் பிரசாஉரிமையுள்ள பிரசைகளாக இணைந்துகொள்ள முயற்சி செய்யலாம். இலங்கையர்களைப் பற்றி தற்போது நாம் குறுகிய மனப்பான்மை வரையறைகளுக்குள் சிந்திப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்கள் என உங்களை அழைத்துக் கொள்ளுதல் வேண்டுமேயன்றி உங்களை புலம்பெயர்ந்த வெளிநாடுகளில் வாழ்கின்ற சிங்களவர்களாக அல்லது தமிழர்களாக அல்லது முஸ்லிம்களாக இன ரீதியான வழி முறைகளில் உங்களை குறிப்பிடலாகாது. எமது பல்வகைமையில் ஐக்கியம் நிலவுதல் வேண்டும். நாம் கனவு காணும் இலங்கையானது எமது பல்லின, பல்மத, பல்வகைக் கலாசாரங்களைக் கொண்ட நாடாகவிருக்கும்.

எமது நாட்டு மக்களுக்கு முன்னேற்றத்தையும் வளவாய்ப்பையும் எய்துவதன் பொருட்டு நாம் தற்போது பொது சமாதான பிரயாணம் ஒன்றின் மீது ஒன்றாகப் பிரயாணம் செய்வோமாக.

நன்றி.